DEPOSITION OF WITNESS

-----

IN THE COURT OF PRINCIPAL JUDGE, CHENNAI

**CC.09/2023 - PW4**

Name : Mr.K.Manivannan

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 on the 15th day of November, 2024.

---

எதிரி ஆஜர்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

அ.சா.ஆ.14–ல் கண்டுள்ள மாதிரிகள் எனக்கு ஆய்விற்கு கிடைத்த தேதி 13.02.2020 என்றால் சரிதான். அ.சா.ஆ.14 அறிக்கை தயாரிக்கப்பட்ட தேதி 29.10.2020 என்றால் சரிதான். அறிக்கையில் காலதாமதத்திற்கான விளக்கம் எதுவும் நான் கூறவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.16–ல் கண்டுள்ள மாதிரிகள் எனக்கு ஆய்விற்கு கிடைத்த தேதி 22.01.2021 என்றால் சரிதான். அந்த ஆய்வு தொடங்கிய தேதி 19.12.2022 என்றால் சரிதான். 31.03.2023 அன்றுதான் ஆய்வு முடிந்து அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆய்விற்கு 22 மாதம் காலதாமதமாக தொடங்கியதற்கும் அறிக்கை காலதாமக கொடுத்ததற்கும் விளக்கம் எதுவும் நான் கூறவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.16 ஆய்வறிக்கை 19.05.2023 அன்றுதான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு எந்த விளக்கமும்

அளிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்ற கடிதம் பெற்றவுடன் நான் அனுப்பி வைத்துள்ளேன். ஆய்வு முடிந்ததும் அறிவிப்பு அனுப்புவது வழக்கம்தான். அ.சா.ஆ.14 இறுதியில் 80 GB Internal Hard disc என்றுள்ளது. அதை நான் தான் வாங்கினேனா என்றால் அது எங்கள் ஆய்வகத்தில் இருந்து வழங்கப்பட்டது. அதுபோல் பொருட்களை கொள்முதல் செய்வதற்கும் எங்களிடம் கொடுப்பதற்கும் அலுவலக நெறிமுறைகள் உள்ளதான என்றால் உள்ளது. அதை நான் கடைபிடித்ததாக இந்த வழக்கில் எங்கும் கூறவில்லை என்றால் அவ்வாறு அறிக்கையில் கூறுவது வழக்கம் அல்ல. அவ்வாறு 80 GB Internal Hard disc வாங்கியதற்கான Bill–கள் எங்கள் அலுவலகத்தில் பண்டக பிரிவில் இருக்கும். அ.சா.ஆ.16–ல் Note–ல் Working procedure manual–(FSD–CH/WPM–1&2/CF) Computer forensic, forensic sciences department(Main Laboratory)Chennai–4 அடிப்படையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த Working procedure manual எங்கள் ஆய்வகத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது எந்த வருடம் தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் 2018–ம் வருடம். அது எங்கள் அலுவலக வழிகாட்டும் நெறிமுறைளாக அதை ஆய்வறிக்கையோடு வழங்குவதில்லை. அதன் நகல் கேட்டால் வழங்க முடியுமா என்றால் அது Controlled copy ஆகும். அதன் நகல்

வழங்கப்படமாட்டாது. பொதுவாக ஆய்விற்கு அனுப்பப்படும் மின்னணு சாட்சியங்கள் எவ்வாறு பறிமுதல் செய்யப்பட்டது, பாதுகாக்கப்பட்டது எவ்வாறு ஆய்விற்கு அனுப்பப்பட்டது என்பது குறித்து கேட்கப்படுமா என்றால் அது ஆய்விற்கு தேவையில்லை என்பதால் கேட்கும் வழக்கம் இல்லை. அதனால் நான் கைப்பற்றுதல் மகஜர், Search Proceeding, படிவம் 95 ஆகியவற்றை கேட்டுப்பெறவில்லை என்றால் சரிதான். ஒரு மின்னணு

சாட்சியத்தை ஆய்விற்கு உட்படுத்தவேண்டும் என்றால் மேற்சொன்ன Search, Seizure and form 95 ஆகியவற்றை கேட்டுப்பெற்று ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும் என்றால் சரியல்ல. அ.சா.ஆ.14–ல் மின்னணு சாட்சியத்தில் image எடுக்கப்பட்டு அதில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாக கூறப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அ.சா.ஆ.16 லும் அவ்வாறு கூறப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.14 அறிக்கை கொடுத்தப்பிறகு அதன் நகல் நான் வைத்திருந்தேனா என்றால் இல்லை. அ.சா.ஆ.14 என்னிடம் கொடுக்கப்பட்ட அனைத்து மின்னணு சாட்சியங்களுக்கான ஒட்டு மொத்த அறிக்கை என்றால் சரிதான். அ.சா.ஆ.14 பக்கம் 18 Note என்பதற்கு கீழே (a)–ல் File attributes and selected folders from items 1 to 16 were retrieved என்று உள்ளது புலன் விசாரணை அதிகாரியின் கேள்விகளின் அடிப்படையிலா என்றால் ஆமாம். Operating system மற்றும் Programme files போன்ற

தேவையற்ற கோப்புகள் தவிர்த்து மற்ற விவரங்கள் நகல் எடுத்து கொடுக்கப்பட்டுள்ளது. புலன் விசாரணை அதிகாரியின் கேள்வி குறித்து அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிட்டு கூறவில்லை. புலன் ஆய்வு அதிகாரியின் கேள்விகளுக்கான பதிலாகதான் அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. புலன் ஆய்வு அதிகாரியின் கேள்விகள் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு நீதிமன்றத்தின் மூலமாக எங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். அ.சா.ஆ–16 ஆய்வறிக்கையின் பத்தி 6–ல் இறுதியாக "The above items were examined forensically with reference to the points detailed in the investigation officer's submission letter" என்று குறிப்பிட்டுள்ளதால் இந்த ஆய்விற்கும் புலன் ஆய்வு அதிகாரியிடமிருந்து கேள்விகள் அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த அறிக்கையோடு அந்த கேள்விகளை இணைத்து அனுப்பியிருந்தால்தான் இந்த அறிக்கை முழுமை பெறும் என்றால் சரியல்ல. அந்த கேள்விகளின் அலுவலக நகல் என் வசம் உள்ளதா என்றால் உள்ளது. அதை நான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க முடியுமா என்றால் அது இயக்குநர் அனுமதி பெற்றுதான் கொடுக்க முடியும். அ.சா.ஆ.16 note 4–ல் இந்த அறிக்கை இயக்குநரின் எழுத்துபூர்வமான ஒப்புதல் இல்லாமல் Reproduce செய்யப்பட கூடாது என்று உள்ளது என்றால் சரிதான். எனவே, இயக்குநரின் அனுமதி இல்லாமல் அதை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பது செல்லதக்கது அல்ல

என்றால் சரியல்ல. மின்னணு சாட்சியங்களை ஆய்வு செய்வதில் எனக்கு 15 வருடங்களுக்கு மேலாக அனுபவம் உள்ளது. எப்போது மின்னணு சாட்சியங்கள் அசல் சான்றுகளில்தான் ஆய்வு மேற்கொள்வேனா என்றால் இல்லை. அது வழக்கின் தன்மையை பொறுத்து. இவ்வழக்கில் அசல் சான்றுகளில்தான் ஆய்வு மேற்கொண்டுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் உரிய தடய அறிவியல் வழிமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளது. எங்கள் அலுவலக கையேட்டின் படியும் மின்னணு சான்றுகள் ஆய்வு மேற்கொள்வதற்கான அதிகாரபூர்வ வழிகாட்டியின் படியும் அசல் சான்றுகளில் ஆய்வுகள் மேற்கொள்ளக் கூடாது என்றால் என்னால் மறுக்க முடியுமா என்றால் முடியும். ஏனெனில் அது அந்த நிபுணரின் முடிவுக்கு உட்பட்டது. அ.சா.ஆ.14 மற்றும் 16 ஆய்வறிக்கைகளில் மின்னணு சான்றுகளின் Hash Value குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.16 ஆவணத்தில் பத்தி 6–ல் " Also, the description of items/nos were followed (concurred with)" என்று உள்ளது என்றால் சரிதான். அதில் files பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

**(இந்நிலையில் எதிரி தரப்பு வழக்கறிஞர் இந்த சாட்சியை மேற்கொண்டு குறுக்கு விசாரணை செய்ய புலன் ஆய்வு அதிகாரியின் கேள்விகளை நீதிமன்றத்தில் சான்றிட்ட நகல் பெற்று பிற்பாடு செய்ய வேண்டியுள்ளதால் அவகாசம் கோரினார். அரசு குற்றவியல் வழக்கறிஞர் தரப்பில் கடுமையான**

**ஆட்சேபனைகள் தெரிவிக்கப்பட்டன. இருப்பினும் நீதியின் நலனை கருத்தில் கொண்டு சாட்சி விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)**

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |